www.padippakam.com

# மா சே துங்



## நடைமுறை பற்றி

படிப்பகம்

www.padippakam.com



## அறிமுகக்குறிப்பு ;

தோழர்கள் மத்தியில் அரசியல் அறிவின் வளர்ச்சி கருதி மாக்சிய ஆசான்களின் நூல்களின் படிப்பின் முக்கியத்துவம் உணரப்படுவதால் தோழர் மா.சே.துங்கின் நான்கு தத்துவக் கட்டுரைகள் என்ற சிறு தொகுப்பில் இருந்து "நடைமுறைபற்றி" என்ற கட்டுரையை தேர்வு செய்தோம். அத்துடன் "மனிதனின் சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன " ஆகிய இருகட்டுரைகளையும் சிறு நூலாக வெளிக் கொண்டு வருகின்றோம்.

கூட்டு படிப்பு, கூட்டு விவாதம் என்பனவற்றினூடாக இத்தகைய கட்டுரைகளை மிக தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும். முதலில் தனியாக பொறுமையுடன் படிப்பதனூடாக நம் முன் எழும் கேள்விகளை கூட்டுப்படிப்பின் போதும், கூட்டு விவாதத்தின் போதும் நாம் விவாதத்துக்கு எடுக்க வாய்ப்பு உண்டாகும். அதன் பயனாக கூட்டு விவாதத்தில் ஈடுபடும் தோழர்கள் ஒரு பொதுக்கருத்துக்கு வரமுடியும். இதன் பயனாக இரு கட்டுரைகளின் கருப்பொருளையும் நாம் விளங்கிக்கொண்டவர்களாவோம்.

இலக்கம்: 2

தோழமையுடன்

மூன்றாவது பாதை.

படிப்பகம்

www.padippakam.com

# மனிதனின் சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன?

மனிதனின் சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன? அவை வானத்திலிருந்து விழுகின்றனவா? இல்லை. மூளையில் இயல்பாக உள்ளனவா? இல்லை. அவை சமுதாய அனுஷ்டானத்திலிருந்து மட்டுமே தோன்றுகின்றன; உற்பத்திப் போராட்டம், வர்க்கப்போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை என்ற மூவகைச் சமுதாய அனுஷ்டானங்களிலிருந்து வருகின்றன. மனிதனின் சமுதாய வாழ்வே அவனுடைய சிந்தனையை நிர்ணயிக்கிறது. முன்னேறிய வர்க்கத்தின் குணாம்சமாக விளங்கும் சரியான கருத்துக்கள் ஒருகால் பொது மக்களால் கிரகித்துக் கொள்ளப்பட்டதும், இக்கருத்துக்கள் சமுதாயத்தை மாற்றுகின்ற, உலகை மாற்றுகின்ற ஒரு பொருளாயத சக்தியாக வடிவெடுக்கின்றன. மக்கள், தமது சமுதாய அனுஷ்டானத்தில், பல்வேறு வகையான போராட்டங்களிலும் ஈடுபட்டு, தமது வெற்றிகள், தோல்விகள் இரண்டிலுமிருந்து செழுமையான அனுபவத்தைப் பெறுகின்றனர். புறநிலை உலகத்தின் எண்ணற்ற தோற்றப்பாடுகள் மனிதனின் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பஞ்சப் புலன்களுக்கும் ஊடாக, அவனுடைய மூளையில் பிரதிபலிக்கின்றன. ஆரம்பத்தில்



அறிவு புலக்காட்சியாக இருக்கின்றது. போதிய அளவு புலக்காட்சி அறிவு தொகுக்கப்பட்டதும், அதில் ஒரு பாய்ச்சல் நிகழ்ந்து அது பகுத்தறிவாக மாறுகின்றது. அதுவே கருத்துக்கள் என்று அழைக்கப்படுகின்றன. இது அறிகையின் ஒரு வளர்ச்சிப்போக்கு. இது அறிகையின் முழு வளர்ச்சிப் போக்கில் முதலாவது கட்டம், அதாவது புறநிலைச் சடப்பொருளிலிருந்து அகநிலை உணர்வுக்குச் செல்லுகின்ற, வாழ்விலிருந்து கருத்துக்களுக்குச் செல்லுகின்ற கட்டம் ஆகும். (தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள். அல்லது வழிமுறைகள் உட்பட) ஒருவரின் உணர்வு அல்லது கருத்துக்கள் எல்லாம் புறநிலை யதார்த்த உலகைச் சரிவரப் பிரதிபலிக்கின்றனவா, இல்லையா என்பது இந்தக் கட்டத்தில் இன்னும் நிருபிக்கப்படவில்லை. இக்கட்டத்தில் அவை சரியானவையா, இல்லையா என்று நிச்சயிப்பதும் சாத்தியமாகாது. பின்னர் அறிகை வளர்ச்சிப்போக்கின் இரண்டாவது கட்டம், அதாவது உணர்விலிருந்து மீண்டும் சடப்பொருளுக்கு, கருத்துகளிலிருந்து மீண்டும் வாழ்வுக்குச் செல்லும் கட்டம் வருகின்றது. இந்தக் கட்டத்தில், தத்துவங்கள்; கொள்கைகள், திட்டங்கள், அல்லது வழிமுறைகள் எல்லாம் எதிர்பார்த்த வெற்றியைத் தருகின்றனவா என்பதை நிச்சயிக்க, முதல் கட்டத்தில் சம்பாதிக்கப்பட்ட அறிவு சமுதாய அனுஷ்டானத்தில் பிரயோகிக்கப்படுகின்றது, பொதுவாகச் சொன்னால், எவை வெற்றி பெறுகின்றனவோ அவை சரியானவை; எவை தோல்வியடைகின்றனவோ அவை பிசகானவை; விசேஷமாக இயற்கையுடன் மனிதன் நடத்தும் போராட்டத்தில் இது உண்மையாகும். சமுதாயப் போராட்டத்தில் முன்னேறிய வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திகள் சில சமயங்களில் தோல்வியடைகின்றன; காரணம் அவர்களுடைய கருத்துக்கள் தவறானவை என்பதல்ல; பதிலுக்கு, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சக்திகளின் சமநிலையில் தற்காலிகமாக முற்போக்கு சக்திகள் பிற்போக்குசக்திகளைப் போல் அவ்வளவு பலம் பெற்றிருக்கவில்லை; எனவே அவை தற்காலிகமாகத் தோல்வியடைகின்றன; ஆனால் இன்றோ, நாளையோ அவை வாகைசூடுவது நிச்சயம். அடுத்து, அனுஷ்டானப் பரீட்சை மூலம் மனிதனுடைய அறிவில் இன்னொரு பாய்ச்சல் நிகழ்கின்றது. இந்தப் பாய்ச்சல் முன்னைய பாய்ச்சலிலும்



படிப்பகம்

www.padippakam.com

பார்க்க முக்கியமானது, காரணம், முதலாவது பாய்ச்சலில், அதாவது, புறநிலை யதார்த்த உலகைப் பிரதிபலிக்கும் போக்கில் வகுக்கப்பட்ட கருத்துகள், தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள் அல்லது வழிமுறைகள் ஆகியவற்றின் சரிபிழையை இந்தப் பாய்ச்சல் மட்டும் நிரூபிக்க முடியும். இவை தவிர உண்மையைப் பரீட்சிக்கும் வழி வேறு கிடையாது. பாட்டாளி வர்க்கம் உலகத்தை அறிந்து கொள்வதற்கான ஒரே நோக்கம், அதை மாற்றுவதேயாகும். சடப்பொருளிலிருந்து உணர்வுக்கும், பின்னர் உணர்விலிருந்து சடப்பொருளுக்கும், அதாவது, அனுஷ்டானத்திலிருந்து அறிவுக்கும், பின்னர் அறிவிலிருந்து அனுஷ்டானத்துக்கும் செல்லும் போக்கு திரும்பத் திரும்பப் பல தடவை நிகழ்ந்த பின்னர் மாத்திரமே ஒரு சரியான அறிவுக்கு வரக்கூடிய நிலை ஏற்படுவது வழக்கம். இத்தகையதுதான் அறிவு பற்றிய மார்க்சியத் தத்துவம், அறிவு பற்றிய இயங்கியல்--பொருள்முதல்வாதத் தத்துவம். இப்பொழுது நமது தோழர்களிற் பலர் இந்த அறிவு பற்றிய தத்துவத்தை இன்னும் புரிந்துகொள்ள வில்லை. அவர்களுடைய சிந்தனை, அபிப்பிராயம், கொள்கை, வழிமுறை, திட்டம், முடிவுரை, நாவன்மை மிக்க சொற்பொழிவு, நீளமான கட்டுரை ஆகியவை எங்கிருந்து வருகின்றன என்பதைக் கேட்டால் அவர்கள் இந்தக் கேள்வியை விசித்திரமானதாகக் கருதுவதோடு, பதிலளிக்க முடியாமலும் இருக்கிறார்கள். சடப்பொருள் உணர்வு நிலைக்கும் உணர்வு நிலை சடப்பொருளுக்கும் மாற்றப்படமுடியும் என்ற நாளாந்த வாழ்வு நிகழ்ச்சிகளாகிய பாய்ச்சல் நிலைமையையுங்கூட அவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறார்கள். ஆகையால் தமது சிந்தனையைச் சரியாக்கி, பரிசீலனை செய்து படிப்பதிலும் அனுபவங்களைத் தொகுப்பதிலும் தேர்ச்சி பெற்று, கஷ்டங்களைக் கடந்து, தவறுகளைக் குறைத்து, வேலையை நன்கு செய்து, இயன்றளவு போராடி, ஒரு மகத்தான பலம் வாய்ந்த சோஷலிச நாட்டைக் கட்டியமைக்கவும் உலகிலுள்ள பரந்துபட்ட அடக்கியொடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களுக்கு உதவிசெய்து, நாம் தோள் கொடுக்க வேண்டிய மாபெரும் சர்வதேசியக் கடமையை நிறைவேற்றவும், நமது தோழர்களுக்கு அறிவு பற்றிய இயங்கியல்-பொருள்முதல்வாதத் தத்துவப் போதனை அளிக்க வேண்டும்.



# நடைமுறை பற்றி

மார்க்சுக்கு முன், பொருள்முதல்வாதம், மனிதனின் சமுதாய இயல்புக்கு புறம்பானதாகவும் அவனுடைய வரலாற்று ரீதியான வளர்ச்சிக்குப் புறம்பானதாகவுமே அறிவைப் பற்றிய பிரச்சனைகளை ஆய்வு செய்தது. ஆதலால் அறிவு சமுதாய நடைமுறையைச் சார்ந்திருக்கிறது என்பதை, அதாவது அறிவு, உற்பத்தியையும், வர்க்கப் போராட்டங்களையும் சார்ந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள இயலாததாக இருந்தது.

அனைத்திற்கும் மேலாக மனிதனுடைய பொருளுற்பத்திக்கான நடவடிக்கையே மிகவும் அடிப்படையான நடைமுறைச் செயல், அதுதான் அவனுடைய பிறநடவடிக்கைகள் அனைத்தையும் தீர்மானிக்கும் செயல் என்று மார்க்சியவாதிகள் கருதுகிறார்கள். மனிதனின் அறிவு என்பது அவனது பொருளுற்பத்திக்கான செயலையே முதன்மையாகச் சார்ந்திருக்கிறது. அதன் மூலமாகவே அவன் இயற்கையின் புதுமைத் தோற்றத்தையும், தன்மைகளையும் விதிமுறைகளையும் படிப்படியாக அறிந்து கொள்கிறான். மேலும் தனக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள உறவையும்,



படிப்பகம்

www.padippakam.com

தனது பொருளுற்பத்திச் செயலின் மூலமாக மனிதர்களுக்கிடையில் பல்வேறு நிலைகளில் சில உறவுகள் நிலவுவதையும் அவன் படிப்படியாக அறிந்து கொள்கிறான். இந்த அறிவுகள் எதையுமே உற்பத்திக்கான செயலுக்கு அப்பாற்பட்ட முறையில் புரிந்துகொள்ள முடியாது. வர்க்க வேறுபாடு இல்லாத சமுதாயத்தில் ஒவ்வொரு நபரும் சமுதாயத்தின் ஒரு உறுப்பினர் என்ற முறையில் பிற உறுப்பினர்களுடன் பொதுவான முயற்சியில் ஒன்றிணைந்து, அவர்களுடன் திட்டவட்டமான உற்பத்தி உறவுகளைக் கொண்டு, மனித வாழ்வின் பொருட் தேவைகளை நிறைவு செய்வதற்கான உற்பத்தியில் ஈடுபடுகிறார்கள். வர்க்க வேறுபாடுகள் நிறைந்த எல்லா சமுதாயங்களிலும், சமுதாயத்தின் வெவ்வேறு வர்க்கங்களின் உறுப்பினர்களும் பல்வேறு வகையில், திட்டவட்டமான உற்பத்தி உறவுகளைக் கொண்டு, அவர்களுடைய வாழ்வுக்கான பொருட் தேவைகளை நிறைவு செய்வதற்கு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். மனித அறிவு வளருவதற்கு முதன்மையான ஊற்றுமூலம் இதுவேதான்.

உற்பத்திச் செயலுடன் மட்டும் மனிதனின் சமுதாய நடைமுறை நின்றுவிடாமல், வர்க்கப்போராட்டம், அரசியல் வாழ்வு, அறிவியல், கலையியல் வெளிபாடுகள்; சுருங்கக் கூறின், சமுதாய வாழ்விலுள்ளவன் என்ற வகையில், சமுதாயத்தின் நடைமுறை வாழ்வின் எல்லாத் துறைகளிலும் மனிதன் பங்கேற்கிறான். இவ்வாறாக மனிதன் பொருளியல் வாழ்வின் மூலமாக மட்டுமின்றி, அரசியல் கலாச்சார வாழ்வின் மூலமாகவும் (இவை இரண்டும் பொருளியல் வாழ்க்கையோடு நெருக்கமாக இணைந்துள்ளன) பல்வேறு நிலைகளில் மனிதர்களுக்கிடையிலான வெவ்வேறு உறவுகளை அறிந்துகொள்கிறான். இத்தகைய வேறுவகையான சமுதாய நடைமுறைகளில், குறிப்பாக வர்க்கப்போராட்டமானது அதன் பல்வேறுபட்ட எல்லா வடிவங்களாலும் மனிதனின் அறிவு வளர்ச்சியில் ஆழமான செல்வாக்கைச் செலுத்துகிறது. வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும்



ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினராக வாழ்கிறார்கள். ஒவ்வொரு சிந்தனையிலும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது.

மனித சமுதாயத்தில் உற்பத்திக்கான செயல் கீழ் நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு படிப்படியாக வளருகிறது. அதை யொட்டி மனிதனின் இயற்கை அல்லது சமுதாய அறிவும் தாழ்ந்த நிலையிலிருந்து படிப்படியாக உயர் நிலைக்கும் அதாவது மேலோட்டமான நிலையிலிருந்து ஆழமான நிலைக்கும் பகுதி நிலையிலிருந்து பன்முகப்பட்ட நிலைக்கும் வளருகிறது என்று மார்க்சியவாதிகள் கருதுகின்றனர். வரலாற்றில் நீண்ட நெடுங்காலமாக மனிதன் சமுதாய வரலாற்றைப் பற்றி ஒருதலைப் பட்சமாகவே புரிந்து கொண்டிருந்தான். ஏனெனில் ஒருபுறம் சுரண்டும் வர்க்கம் எப்பொழுதும் வரலாற்றை தனக்கேற்ற வகையில் சிதைத்து வந்திருப்பதும், மறுபுறத்தில் சிறிய அளவிலான உற்பத்தி மனிதனுடைய கண்ணோட்டத்தைக் குறுக்கிவிட்டதும்தான். நவீன பாட்டாளி வர்க்கம் மிகப்பெரிய உற்பத்திச் சக்திகளுடன் (பெரிய தொழிற்சாலை) உயிர்த்தெழும் வரையில், மனிதனால் சமுதாய வளர்ச்சியைப் பற்றி விரிவான வரலாற்று அறிவைப் பெற முடியவில்லை என்பதோடு, இந்த அறிவை ஓர் அறிவியல் தத்துவமாக, மார்க்சியம் என்னும் அறிவியலாக மாற்றவும் இயலவில்லை.

மனிதனின் புற உலகத்தைப் பற்றிய உண்மையான அறிவிற்கு அவனது சமுதாய நடைமுறை மட்டும்தான் ஒரே அளவு கோலாக இருக்கிறது என்று மார்க்சியவாதிகள் கருதுகிறார்கள். உண்மையில் நடைபெறுவது யாதெனில், சமுதாய நடைமுறை நிகழ்ச்சிப் போக்கில் (பொருளுற்பத்தி, வர்க்கப் போராட்டம் அல்லது விஞ்ஞான பரிசோதனை) அவன் எதிர்பார்த்த பலனை அடையும்போதுதான் மனிதனின் அறிவு சோதிக்கப்பட்டதாகிறது. ஒருவன் தன்னுடைய வேலையில் வெற்றியடைய விரும்பினால் அதாவது, எதிர்



படிப்பகம்

www.padippakam.com

பார்த்த விளைவுகளைப் பெறவிரும்பினால், தனது கருத்துக் களை புறநிலை உலகின் விதிகளுடன் இசைவுடையவையாக செய்யவேண்டும்; அவை இசைவாகாவிட்டால் அவன் நடைமுறைப் படுத்தும்போது தோல்வியடைவான். தோல்வி யடைந்தபின் அவன் தோல்வியிலிருந்து தனது படிப்பினை களைப்பெற்று புறநிலை உலகின் விதிகளுக்கு இசைவாக தனது கருத்துக்களை மாற்றி தோல்வியை வெற்றியாக மாற்ற முடியும். ''தோல்வி என்பது வெற்றியின் தாய்'', ''இடறிவிழுதல் அறிவில் எழுதல்'' என்பனவற்றின் பொருள் இதுவே. அறிவு பற்றிய இயங்கியல் பொருள்முதல்வாதத் தத்துவம், நடைமுறையை முதன்மையான இடத்தில் வைக்கிறது. மனித அறிவை எந்த வழியிலும் நடைமுறையிலிருந்து பிரிக்க முடியாது என்று கருதுகிறது என்பதோடு, நடைமுறையின் முக்கியத்துவத்தை மறுக்கின்ற, நடை முறையிலிருந்து அறிவைப் பிரிக்கின்ற தவறான தத்துவங்கள் அனைத்தையும் புறக்கணிக்கிறது. எனவே ''நடை முறை (தத்துவ) அறிவை விட உயர்ந்தது, ஏனெனில் அது எங்கும் எல்லாக்காலத்திலும் நிறைந்திருக்கும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருப்பது மட்டுமின்றி, கண்கூடான உண்மையாகவும் இருக்கிறது'' என்று லெனின் கூறினூர்[1]. இயங்கியல் பொருள்முதல்வாதம் பற்றிய மார்க்சியத் தத்துவத்திற்கு இரண்டு சிறப்பியல்புகள் உண்டு. ஒன்று அதன் வர்க்க இயல்பு; இயங்கியல் பொருள்முதல் வாதம் என்பது பாட்டாளி வர்க்கத்திற்கு சேவை செய்வது என்று அது வெளிப்படையாக பிரகடனம் செய்கிறது. மற்றொன்று, நடைமுறைப் படுத்துவதற்கான அதன் சாத்தியப்பாடு; தத்துவம் நடைமுறைப்படுத்துவதில் தங்கியிருப்பதை அது வலியுறுத்துகிறது; தத்துவம் நடைமுறையை ஆதாரமாகக் கொண்டது; மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கே பயன்படுகிறது என்று வலியுறுத்துகின்றது; எந்த அறிவின் அல்லது தத்துவத்தின் உண்மைத் தன்மையையும் ஒருவர் கொள்ளும் அக உணர்ச்சிகளைக் கொண்டு தீர்மானிப்பதில்லை; மாறாக சமுதாய நடைமுறையில் அவற்றால் விளையும் யதார்த்த பலனைக் கொண்டே தீர்மானிக்கப்



படுகிறது. சமுதாய நடைமுறை மட்டும்தான் உண்மைக்கு உரை கல்லாக இருக்கமுடியும். அறிவு பற்றிய இயங்கியல் பொருள்முதல்வாதத் தத்துவத்தின் முதன்மையான அடிப்படையான நிலைப்பாடாக இருப்பது நடைமுறை பற்றிய அதன் நிலைப்பாடுதான்.[2]

ஆனால், எவ்வாறு மனித அறிவு நடைமுறையிலிருந்து எழுந்து நடைமுறைக்குத் தொண்டாற்றுகிறது? அறிவு வளர்ச்சி எவ்வாறு நிகழ்கிறது என்பதை நாம் பார்த்தால் இது தெளிவாகத் தெரியும்.

நடைமுறை நிகழ்ச்சியின்போது, மனிதன் முதன்முதலில் பல்வேறு விஷயங்களின் புதுமைத் தோற்றத்தை, தனித்தனி அம்சங்களை, விஷயங்களின் புற உறவுகளைத்தான் பார்க்கிறான். உதாரணமாக யேனானைச் சுற்றிப் பார்த்து அறிவதற்காக சிலர் வெளியிலிருந்து வருகிறார்கள். முதல் ஒன்றிரண்டு நாட்கள் அவர்கள் யேனானின் அமைப்பை, அதன் வீதிகளை, வீடுகளைப் பார்க்கிறார்கள்; பலரைச் சந்திக்கிறார்கள், கேளிக்கை விருந்துகள், மாலைக் கூட்டங்கள், மக்கள் கூட்டங்கள் ஆகியவற்றில் பங்குகொள்கிறார்கள்; பல்வேறுவகையான உரையாடல்களைக் கேட்கிறார்கள்; பல தஸ்தாவேஜுகளைப் படிக்கிறார்கள். இவையெல்லாம் விஷயங்களின் புதுமை தோற்றங்கள்; அந்த விஷயங்களின் தனித்தனி அம்சங்கள். அந்த விஷயங்களுக்கு இடையே உள்ள புற உறவுகளாகவே இருக்கின்றன. இது புலக்காட்சி அறிவின் கட்டம் எனப்படுகிறது. புலன்களுக்கு புலப்பட்டதை மனதில் பதியச் செய்து கொள்ளும் கட்டம் இது. அதாவது, யேனானிலுள்ள குறிப்பிட்ட இந்த விஷயங்கள் பார்வையாளர்களின் புலன் உறுப்புகளில் செயல்பட்டு, புலன் அறிவைத் தூண்டி, மூளையில் பல பதிவுகளைத் தோற்றுவித்து, அத்தோடு இந்தப் பதிவுகளின் புற உறவுகளைப்பற்றிய பொதுவானதோர் வரைபடத்தையும் தோற்றுவிக்கிறது; இது அறிதலின் முதற்கட்டமாகும். இக்கட்டத்தில் ஆழ்ந்த கருத்துக்களை உருவாக்கிக்கொள்ளவோ தர்க்க ரீதியான முடிவுக்கு வரவோ மனிதனால் முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

சமுதாய நடைமுறை தொடர்ந்து கொண்டிருக்கையில் நடைமுறையினூடே மனிதனுக்குப் புலப்படுத்தி, அவனுடைய மூளையில் பதிவை ஏற்படுத்திய விஷயங்கள் திரும்பத் திரும்ப பலமுறை நிகழ்கின்றன; பிறகு மனிதனுடைய அறிதலின் நிகழ்ச்சிப்போக்கில் மூளையில் ஒரு திடீர் மாற்றம் (துரிதப் பாய்ச்சல்) ஏற்படுகிறது. கருத்துக்கள் உருவாகின்றன. கருத்துக்கள் என்பவை விஷயங்களின் புதுமைத் தோற்றங்களாக, அவற்றின் தனித்தனி அம்சங்களாக, அவற்றின் புற உறவுகளாக இனியும் இருப்பதில்லை; அந்த விஷயங்களின் சாரம்சத்தை, அவற்றின் ஒட்டுமொத்தத் தன்மையை, அவற்றின் உள்ளுறவுகளை அந்தக் கருத்துக்கள் உட்கொண்டிருக்கின்றன. கருத்துக்களுக்கும், புலக்காட்சி அறிவுக்கும் இடையில் அளவில் மட்டுமின்றி பண்பிலும்கூட வேறுபாடு இருக்கின்றது. தீர்மானம், ஊகித்தல் ஆகியவற்றின் மூலம் மேலும் முன்னேறிச் செல்வதன் மூலம் ஒருவரால் தர்க்க ரீதியான முடிவிற்கு வர முடிகிறது. ''புருவத்தை நெரித்தால் புதிய உபாயம் தோன்றும்'' என்ற மூன்று சாம்ராஜ்யங்களின் கதையில்[3] கூறப்படுவதும் ''யோசித்துப்பார்க்கிறேன்'' என்று அன்றாட வழக்கில் நாம் கூறுவதும், நிறை குறைகளை எடைபோட்டு முடிவிற்கு வருவதற்காகவும், ஊகிப்பதற்காகவும் மனிதன் தன் மூளையில் கருத்துக்களைப் பயன்படுத்துவதையே குறிப்பிடுகின்றன. இது அறிவின் இரண்டாவது கட்டம். பார்வையாளர் குழுவில் யேனானுக்கு வந்திருப்பவர்கள் பல்வேறு தகவல்களை சேகரித்துக் கொண்டு அவற்றைச் ''சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்தபின்'' ''ஜப்பான் எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி பற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை ஆழமானது, நேர்மையானது, உள்ளத்தூய்மையுடையது'' என்று தீர்மானிக்க முடியும். இந்தத் தீர்மானத்திற்கு வந்தபின், நாட்டைக் காக்க ஒன்றுபடுவதில் அவர்களும் உண்மையானவர்களாக இருந்தால், மேலும் ஒருபடி முன்னேறி ''ஜப்பான் எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணி வெற்றி பெறும்'' என்ற முடிவுக்கு அவர்களால் வர முடியும். ஒரு விஷயத்தைப்பற்றி



மனிதனுக்கு அறிவை ஏற்படுத்தும் இந்தக்கட்டமே, கருத்தை உருவாக்கி, மெய் பொய்மைகளை மதிப்பிட்டு, முடிவுக்கு வரும் இந்த கட்டமே, ஒரு விஷயத்தை அறிந்துகொள்ளும் நிகழ்ச்சிப்போக்கின் மிகவும் முக்கியமான கட்டம்; இதுதான் பகுத்தறிவுக் கட்டம். அறிவு பெறுவதில் உண்மையான கடமை என்னவெனில் புலக்காட்சி, அறிவினூடே சிந்தனையை அடைந்து, புறநிலையான பொருட்களின் உள்முரண்பாடுகளை விரிவாக, படிப்படியாக அறிந்துகொள்வது, அதன் விதிகளையும், ஒரு நிகழ்ச்சிப்போக்கிற்கும் மற்றொன்றிற்கும் இடையிலான உறவுகளையும் அறிந்து கொள்வதாகும். அதாவது தர்க்க ரீதியான அறிவை அடைவதாகும். மீண்டும் கூறினால், தர்க்க ரீதியான அறிவு புலக்காட்சி அறிவிலிருந்து வேறுபட்டது; புலக்காட்சி அறிவானது, விஷயங்களின் தனித்தனி அம்சங்கள், புதுமைத்தோற்றங்கள், புற உறவுகளைப் பற்றியதாகும். ஆனால் தர்க்கரீதியான அறிவு என்பதோ விஷயத்தின் முழுமையை, சாராம்சத்தை, உள்உறவுகள் ஆகியவற்றை அடைவதற்காகப் பெரும் தூரம் தாண்டி முன்னேறுவதோடு, சூழ்ந்திருக்கும் உலகின் உள்முரண்பாடுகளை வெளிப்படுத்திக் காட்டுகிறது. எனவே தர்க்க ரீதியான அறிவு என்பது சூழ்ந்துள்ள உலகின் முழுமையான வளர்ச்சிப் போக்கையும் அதன் எல்லா அம்சங்களுக்கு இடையேயும் நிலவும் உள்உறவுகளையும் உட்கொண்டதாக இருக்கிறது.

நடைமுறையை ஆதாரமாகக் கொண்டு, மேலோட்டமான அறிவிலிருந்து ஆழ்ந்த அறிவிற்கு முன்னேறிச் செல்கின்ற, அறிவுவளரும் நிகழ்ச்சிப்போக்குப் பற்றிய இயங்கியல் பொருள்முதல்வாதத் தத்துவத்தை மார்க்சியம் தோன்றுவதற்குமுன் எவரும் வகுத்துத் தரவில்லை. மார்க்சியப் பொருள்முதல்வாதம்தான் முதல்முதலாக இந்தப் பிரச்சனையை சரியாகத் தீர்த்து வைத்தது; உற்பத்திப் போராட்டம், வர்க்கப்போராட்டம் ஆகிய மீண்டும் மீண்டும் தொடர்ந்து நிகழும் தனது சிக்கல் நிறைந்த நடைமுறையின்



படிப்பகம்

போது, சமுதாயத்தில் வாழும் மனிதன் புலக்காட்சி அறிவிலிருந்து தர்க்கரீதியான அறிவிற்கு முன்னேறிச் செல்வதை, அறிவு பெறுதல் என்பது ஆழ்ந்த தன்மைபெறும் இயக்கத்தை, பொருள் முதல்வாத அடிப்படையிலும் இயங்கியல் ரீதியிலும் சுட்டிக் காட்டியதன் மூலம் மார்க்சியப் பொருள்முதல்வாதம் தான் முதன்முதலில் இப்பிரச்சனையைச் சரியாக தீர்த்து வைத்தது. சடப்பொருள் பற்றிய அல்லது இயற்கையின் ஒரு விதி பற்றிய பொதுக் கருத்து அல்லது மதிப்பு பற்றிய பொதுக் கருத்து முதலியன, சுருங்கக் கூறினால் எல்லா அறிவியல் (சரியான, ஆழமான, மடத்தனமற்ற) பொதுக் கருத்துக்களும் இயற்கையை மேலும் ஆழமாக, உண்மையாக, முழுமையாகப் பிரதிபலிக்கிறது என்று லெனின் கூறினார்[4]. அறிதலின் வளர்ச்சிப் போக்கின் இரண்டு கட்டங்களில் ஒவ்வொன்றுக்கும், அதற்கே உரிய தனித் தன்மைகள் உண்டு என்று மார்க்சியம்-லெனினியம் கருதுகிறது; அறிவு முதற் கட்டத்தில் கீழ் நிலையில் புலக்காட்சி அறிவாகவும் இரண்டாவது கட்டத்தில், உயர் நிலையில் தர்க்கரீதியான அறிவாகவும் வெளிப்படுகிறது; ஆனால் இவை இரண்டும் அறிதலின் ஒன்றிணைந்த ஓரே நிகழ்ச்சிப் போக்கின் இரு கட்டங்களாகும். புலக்காட்சி அறிவும், பகுத்தறிவும் பண்பியல் ரீதியில் வேறுபட்டவை. ஆனால் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்திருப்பதில்லை; நடைமுறையின் அடிப்படையில் அவை ஒன்றிணைந்திருக்கின்றன.

புலப்படுவதை உடனடியாகப் புரிந்து கொள்ள முடியாது என்பதையும், எதைப் புரிந்து கொண்டோமோ அதைத்தான் மேலும் ஆழமாகப் பார்க்க முடியும் என்பதையும் நமது நடைமுறை நிரூபிக்கிறது. புதிய தோற்றங்களின் பிரச்சனையை மட்டும்தான் புலக்காட்சி அறிவு தீர்த்து வைக்கிறது; ஆனால் சாராம்சம் பற்றிய பிரச்சனையை தத்துவத்தால்தான் தீர்க்க முடியும். இந்த இரண்டு பிரச்சனைகளின் தீர்வையும் நடைமுறையிலிருந்து அணு அளவுகூடப் பிரிக்க முடியாது. ஒருவர் எந்த ஒரு விஷயத்தை அறிய விரும்பினாலும் அவருக்கு



அத்துடன் தொடர்பு கொள்வதைத்தவிர அதாவது அதன் சூழ்நிலையில் வாழ்வதைத் (நடைமுறையில் ஈடுபடுவதை) தவிர வேறு வழியில்லை.

நிலவுடமைச் சமுதாயம் நிலவும்போது முதலாளித்துவ சமுதாயத்தின் விதிமுறைகளை முன் கூட்டியே அறிந்து கொள்ள முடியவில்லை; ஏனென்றால் முதலாளித்துவம் அப்பொழுது தோன்றியிருக்கவில்லை. அதற்குரிய நடைமுறை இல்லாமலிருந்தது; மார்க்சியம், முதலாளித்துவ சமுதாயத்தின் படைப்பாகமட்டுமே இருக்கமுடியும். முதலாளித்துவத்தின் சுதந்திரமான போட்டா போட்டியின் யுகத்தில் வாழ்ந்த காரல் மார்க்சால் ஏகாதிபத்திய யுகத்திற்குரிய சில தனித் தன்மை வாய்ந்த விதிகளை முன்கூட்டியே ஸ்தூலமாக அறிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால் முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டமான ஏகாதிபத்தியம் அப்பொழுது தோன்றியிருக்கவில்லை. எனவே, அதற்குரிய நடைமுறை இல்லாமலிருந்தது; லெனினாலும் ஸ்டாலினாலும்தான் இந்தக் கடமையை நிறைவேற்ற முடிந்தது.

மார்க்சு, ஏங்கல்சு, லெனின், ஸ்டாலின் ஆகியோர்களால் தங்களுடைய தத்துவங்களை வகுத்தளிக்க முடிந்தது எவ்வாறு என்றால், அவர்களின் நுண் அறிவு ஒரு புறமிருக்க, அவர்களின் காலத்தில் நிகழ்ந்த வர்க்கப்போராட்ட நடைமுறையிலும் விஞ்ஞானப் பரிசோதனைச் செயலிலும் அவர்களே நேரடியாகப் பங்கேற்றதே முதன்மையான காரணம். இந்தச் சூழ்நிலை இல்லாவிடில் எந்த நுண்ணறிவாளராலும் வெற்றிபெற்றிருக்க முடியாது. ''படிக்கட்டைத் தாண்டாமலேயே அறிவாளி பரந்த உலக விவகாரங்களை அறிகிறான்'' என்றபேச்சு, தொழில் நுட்பம் வளர்ச்சியடையாத பழங்காலத்திய வெறும் வெட்டிப் பேச்சாகும். தொழில் நுட்ப அறிவு வளர்ச்சி அடைந்திருக்கும் இன்றைய கால கட்டத்தில் இது பொருந்துவதாக இருந்தாலும் உலகம் முழுவதும் பரவலாக நடைமுறையில் ஈடுபட்டிருக்கும் மக்கள்தான் உண்மையான நேரடியான அறிவுடையவர்களாவார்கள்.

www.padippakam.com

இந்த மக்கள் தமது நடைமுறையின் மூலம் ''அறிவைப்'' பெறும்பொழுது மட்டும்தான், அந்த அறிவு எழுத்து மூலமாகவும், தொழில் நுட்ப வழிகளின் மூலமாகவும் அறிவாளியிடம் கிடைக்கும்பொழுது மட்டும்தான் அவர் மறைமுகமாக ''பரந்த உலக விவகாரங்கள் எல்லாவற்றையும் அறிகிறார்.''

நீங்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தையோ, அல்லது குறிப்பிட்ட விஷயங்களின் தொகுதியையோ நேரடியாக அறியவிரும்பினால், நடைமுறைப் போராட்டத்தில் நீங்களே நேரடியாகப் பங்கு பெற்றாக வேண்டும். யதார்த்தத்தை மாற்றுவதற்கான, ஒரு குறிப்பிட்ட விஷயத்தை, குறிப்பிட்ட விஷயங்களின் தொகுதியை மாற்றுவதற்கான நடைமுறைப் போராட்டத்தில் நேரடியாக பங்கு பெற்றாக வேண்டும். இவ்வாறுதான் புதிய தோற்றங்கள் என்ற முறையில் அவற்றோடு நீங்கள் தொடர்பு கொள்ள முடியும். யதார்த்தத்தை மாற்றுவதற்காக நீங்களே நேரடியாக பங்கெடுக்கும் நடைமுறைப் போராட்டத்தில்தான் அந்த விஷயங்கள், அல்லது விஷயங்களின் தொகுதியின் சாராம்சத்தை உங்களால் விண்டு பார்த்துப் புரிந்து கொள்ள முடியும். அறிவை அடைவுதற்கான இந்த வழியில்தான் ஒவ்வொருவரும் உண்மையில் செல்கிறார்கள்; ஆனால் விஷயங்களை வேண்டுமென்றே திரித்துப் புரட்டுபவர்கள்தான் இதற்கு நேர்மாறாக வாதிக்கிறார்கள். ''எல்லாம் தெரிந்த மேதாவி தான்'' உலகத்தில் அதிகமான ஏளனத்திற்குரியவர். சிறிது கேள்வி ஞானத்தில் அரைவேக்காட்டு அறிவைப் பெற்றுக்கொண்டு, இவர் ''உலகத்தின் ஆதார பூர்வமான முதலாம் நபராக'' தன்னை விளம்பரப்படுத்தி கொள்கிறார்; அவர் தன்னையே சரியாக எடைபோட்டு மதிப்பிட்டுக் கொள்ளவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. அறிவு என்பது விஞ்ஞானம் தழுவிய ஒரு விஷயம். இதில் நேர்மையின்மையோ செருக்கோ அனுமதிக்க முடியாதவை. இதில் உண்மையில் தேவையானவை இவற்றுக்கு நேர் எதிரானவை-நேர்மையும் அடக்கமும் ஆகும். நீங்கள் அறிவு பெற விரும்பினால்,



யதார்த்தத்தை மாற்றும் நடைமுறையில் பங்கு பெற்றாக வேண்டும். பேரிக்காயின் சுவையை நீங்கள் அறிய விரும்பினால் அதை நீங்களே தின்று ருசி பார்க்க வேண்டும். அணுக்களின் உள் அமைப்பையும் குணங்களையும் நீங்கள் அறிய விரும்பினால், அணுக்களின் கட்டமைப்பை மாற்றுவதற்காக நீங்கள் பௌதீக-ரசாயனப் பரிசோதனை செய்ய வேண்டும். புரட்சியின் தத்துவம், வழிமுறைகள் பற்றி நீங்கள் அறிய விரும்பினால், நீங்கள் புரட்சியில் பங்குபெற வேண்டும். உண்மையான அறிவு முழுவதும் நேரடியான அனுபவத்திலிருந்தே தோன்றுகிறது. ஆனால் மனிதன் எல்லா விஷயங்களிலும் நேரடியான அனுபவத்தைப் பெற முடியாது. உண்மையில் நமது அறிவின் பெரும்பகுதி மறைமுக அனுபவத்திலிருந்தே வருகிறது. பண்டைகால அறிவு, அந்நிய நாடுகளின் அறிவு முழுவதும் இதற்கு உதாரணங்களாகும். பண்டைகால மக்களுக்கும், அந்நியர்களுக்கும் அந்த அறிவு நேரடியான அனுபவமாக இருந்தது. அல்லது இருக்கிறது; பண்டைக்கால மக்கள், அந்நிய நாட்டவர்கள் ஆகியோரின் நேரடியான அனுபவம் என்ற வகையில் அந்த அறிவு ''விஞ்ஞான ரீதியான பொதுக்கருத்துக்கு'' லெனின் குறிப்பிடும் தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தால் அல்லது செய்தால், புறநிலை யதார்த்தத்தை விஞ்ஞான ரீதியாகப் பிரதிபலித்தால் அது நம்பத்தக்கது; இல்லாவிட்டால் அந்த அறிவை நம்ப முடியாது. எனவே மனித அறிவு இரு பகுதிகளை மட்டும் கொண்டது; நேரடியான அனுபவத்திலிருந்து கிடைப்பது ஒன்று. மறைமுகமான அனுபவத்திலிருந்து கிடைப்பது மற்றொன்று. எனக்கு மறைமுக அனுபவமாக இருப்பதே மற்றொருவருக்கு நேரடி அனுபவமாக இருக்கிறது. எனவே, அறிவு என்பதை முழுமையாகப் பார்த்தால், எந்த வகைப்பட்ட அறிவையும் நேரடி அனுபவத்திலிருந்து பிரிக்க முடியாது. மனிதன் தன் புலன் உறுப்புகளால் தன்னை சூழ்ந்திருக்கும் யதார்த்த உலகத்தை புலக்காட்சியாக அறிவதால் தான் எல்லா அறிவும் தோன்றுகிறது. இத்தகைய புலன்



படிப்பகம்

www.padippakam.com

அறிவை மறுப்பவன் நேரடி அனுபவத்தை மறுக்கிறான். அல்லது யதார்த்தத்தை மாற்றுவதற்கான நடைமுறையில் பங்கு கொள்வதை மறுக்கிறான். அவன் ஒரு பொருள்முதல்வாதியல்ல. இதனால்தான் ''எல்லாம் தெரிந்த மேதாவியைக்'' கேலிக்குரியவன் என்கிறோம். ''புலிக் குகையில் புகாமல் புலிக்குட்டியைப் பிடிப்பது என்பது எவ்வாறு முடியும்?'' என்றொரு சீனப் பழமொழி உண்டு. மனிதனின் நடைமுறைக்கும் இந்தப் பழமொழி உண்மையில் பொருந்தும். அறிவு பற்றிய தத்துவத்திற்கும் இது உண்மையில் பொருந்தும். நடைமுறைக்கு புறம்பான அறிவு என்பது இருக்கவே முடியாது.

யதார்த்தத்தை மாற்றியமைக்கும் நடைமுறையிலிருந்து எழும் இயங்கியல் பொருள்முதல்வாத அறிதலின் இயக்கத்தை, அறிவு பெறுவது படிப்படியாக ஆழப்பட்டுவரும் இயக்கத்தை தெளிவுபடுத்துவதற்காக சில ஸ்தூலமான உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பாட்டாளி வர்க்கம் தன் நடைமுறையின் முதற்கட்டத்தில் இயந்திரங்களை உடைத்து நொறுக்கியும் தானாக குமுறியெழுந்து போராடுவதுமான காலத்தில் முதலாளித்துவ சமுதாயத்தைப்பற்றிய அதன் அறிவு, புலக்காட்சி அறிவாகவே இருந்தது. முதலாளித்துவத்தின் புதிய தோற்றங்களின் சில அம்சங்களையும் புற உறவுகளையுமே அது அறிந்திருந்தது. அப்பொழுது பாட்டாளி வர்க்கம் ''தானேயான வர்க்கமாக''வே இருந்தது. ஆனால் இந்த வர்க்கம் தனது நடைமுறையின் இரண்டாவது கட்டத்தை அடைந்த போது உணர்வு பூர்வமாகவும் அமைப்பு ரீதியிலும் பொருளாதார, அரசியல் போராட்டங்களை நடத்தும் காலத்தில், முதலாளித்துவ சமுதாயத்தின் சாராம்சத்தை, சமூக வர்க்கங்களிடையேயுள்ள சுரண்டல் உறவையும் தனக்கே உரிய வரலாற்று கடமையையும் புரிந்துகொள்வதற்கு பாட்டாளி வர்க்கத்தால் முடிந்தது; அது அவ்வாறு செய்ய முடிந்ததற்கு காரணம் அதன் சொந்த நடைமுறையும், நீண்டகாலப் போராட்



டத்தில் பெற்ற அதன் அனுபவங்களும்தான். இதை மார்க்சும் ஏங்கல்சும் எல்லா வகைகளிலும் விஞ்ஞான ரீதியில் தொகுத்து பாட்டாளி வர்க்கத்தின் கல்விக்காக மார்க்சியத் தத்துவத்தை உருவாக்கினார்கள். இதற்குப் பிறகுதான் பாட்டாளி வர்க்கம் ''தனக்கான வர்க்க''மாக மாறியது.

சீன மக்களும் ஏகாதிபத்தியத்தைப் பற்றி இதே வழியில்தான் அறிந்து கொண்டார்கள். முதற் கட்டத்தில் மேலோட்டமான புலக்காட்சி அறிவுதான் ஏற்பட்டிருந்தது. தய்ப்பிங் சொர்க்க சாம்ராஜ்ஜிய இயக்கம்[5], யிஹோடுவான் இயக்கம்[6] போன்ற கண்மூடித்தனமான அந்நிய எதிர்ப்புப் போராட்டங்கள் இதை எடுத்துக் காட்டுகின்றன. இரண்டாவது கட்டத்தில்தான் சீன மக்கள் பகுத்தறிவின் கட்டத்தை அடைந்தார்கள். ஏகாதிபத்தியத்தின் உள், வெளி முரண்பாடுகளைக் கண்டு கொண்டார்கள். பரந்துபட்ட சீன மக்களைச் சுரண்டுவதற்காக, ஏகாதிபத்தியம் சீனத் தரகு வர்க்கத்துடனும் நிலவுடமை வர்க்கத்துடனும் கூட்டுச் சேர்ந்திருக்கிறது என்ற அடிப்படை உண்மையைக் கண்டுகொண்டார்கள். 1919-ம் ஆண்டு மே 4-ம் நாள் இயக்கத்தின்[7] போதுதான் இந்த அறிவு ஏற்படத் தொடங்கியது.

அடுத்து, நாம் யுத்தத்தைப் பரிசீலிப்போம். ஒரு யுத்தத்தைத் தலைமையேற்று நடத்துகிறவர்கள் யுத்த அனுபவம் இல்லாதவர்களாக இருந்தால், குறிப்பிட்டதோர் யுத்தத்தை நடத்துவதற்கான (உதாரணமாக கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்ற விவசாயப் புரட்சி யுத்தம்) உள்ளார்ந்த விதிகளை ஆரம்பக் கட்டத்தில் அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. ஆரம்பக் கட்டத்தில் அவர்களுக்கு நன்கு சண்டை செய்யும் அனுபவம் கிடைக்கிறது. அவ்வளவுதான். வேறென்ன? பல தோல்விகளையும் அடைகிறார்கள். ஆனால், அந்த அனுபவத்திலிருந்து (வெற்றி பெற்ற போராட்டங்களின் அனுபவத்திலிருந்தும், குறிப்பாகத் தோல்வியடைந்த போராட்ட அனுபவங்களிலிருந்



படிப்பகம்

www.padippakam.com

தும்) முழு யுத்தத்தின் உள்ளோட்டமான சரடை, அதபவது அக் குறிப்பிட்ட யுத்தத்தின் விதிகளை முழுமையாக அறிந்து கொண்டு, அதன் போர்த்தந்திரத்தையும், செயல் தந்திரத்தையும் புரிந்து கொண்டு, அதன் பயனாக அவர்களால் யுத்தத்தை மேலும் நம்பிக்கையுடன் நடத்த முடிகிறது. அத்தகையதோர் தருணத்தில், ராணுவத் தலைமைப் பொறுப்பை மாற்றி அனுபவமில்லாத ஒருவரிடம் ஒப்படைத்தால், பிறகு அவரும் கூட யுத்தத்தின் உண்மையான விதிகளை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு முன்னால் தோல்விகள் பலவற்றை சந்திக்க வேண்டியிருக்கிறது. (அனுபவங்களைப் பெற வேண்டியுள்ளது).

தன்னிடம் ஒப்படைக்கப்படும் ஒரு வேலையை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் தோழர் ஒருவர், ''என்னால் செய்ய முடியும் என்னும் உறுதி எனக்கு இல்லை'' என்று கூறுவதை நாம் அடிக்கடிக் கேட்கிறோம். ஏன் அவர் தன்னைப்பற்றியே உறுதியற்றவராக இருக்கிறார்? ஏனென்றால், அந்த வேலையின் உள்ளடக்கத்தையும் சூழ்நிலைமைகளையும் பற்றி அவருக்கு முறையான அறிவு இல்லை; அல்லது அத்தகைய வேலையுடன் அவருக்கு அதுவரை மிகச்சிறிதளவு தொடர்பே இருந்திருக்கிறது; அல்லது அறவே தொடர்பு இருக்கவில்லை; எனவே அந்த வேலையின் விதிகள் அவருக்கு அப்பாற்பட்டவையாய் உள்ளன. அந்த வேலையின் இயல்பையும் சூழ்நிலைமைகளையும் விவரமாக பகுத்தாராய்ந்த பின், அவருக்குத் தன்னைப்பற்றிக் கூடுதலான நம்பிக்கையும் உறுதியும் ஏற்படுவதோடு, அந்த வேலையையும் அவர் விரும்பிச் செய்வார். அவர் அந்த வேலையில் சிறிது காலத்தை செலவிட்டு அனுபவத்தை பெற்றுக்கொண்டபின், தன்மனப்போக்கிலோ, ஒருதலைபட்சமாகவோ, மேலோட்டமாகவோ இல்லாமல், பிரச்சனைகளை திறந்த மனதோடு அணுகும் ஒருவராக இருந்தால், பிறகு தன் வேலையை, மேற்கொண்டு எப்படிச் செய்வது என்பதைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்து மேலும் அதிகத் துணிவுடன் அவரால் அதை



நிறைவேற்ற முடியும். தன்மனப் போக்கிலும், ஒரு தலைப் பட்சமாகவும் மேலோட்டமாகவும் பிரச்சனைகளை அணுகுவோர் மட்டும்தான் ஓர் இடத்திற்கு வந்தவுடன் சூழ்நிலைமைகளை ஆராயாமல், விஷயங்களை முழுமையாகப் (அவற்றின் வரலாறு, அவற்றின் நிகழ்கால, ஒட்டுமொத்த நிலைமை ஆகியவற்றை) பார்க்காமல், விஷயங்களின் சாரம்சத்தை (அவற்றின் இயல்பு, விஷயங்களுக்கிடையேயுள்ள உள்ளுறவுகள்) ஊடுருவிப்பாராமல் சுயதிருப்தி மனப்பாங்கில் உத்திர விடுவார்கள் அல்லது கட்டளைகளைப் பிறப்பிப்பார்கள். இத்தகைய நபர்கள் இடறி விழுவது நிச்சயம்.

ஆக, அறிதலின் நிகழ்ச்சிப் போக்கின் முதல் நடவடிக்கை, புற உலக விஷயங்களோடு தொடர்பு கொள்வதாகும். இது புலக்காட்சி அறிவின் கட்டமாகும். புலக்காட்சியால் அறிந்த விவரங்களைச் சீர்படுத்தி புனரமைப்புச் செய்வதன் மூலம் முறைப்படுத்துவது இரண்டாவது நடவடிக்கையாகும்; இது கருத்துக்களை உருவாக்குதல், முடிவு செய்தல், ஊகித்தல் ஆகியவற்றின் கட்டமாகும். புலக்காட்சி அறிவின் விவரங்கள் (துண்டு துண்டாகவோ, முறையற்றோ இல்லாமல்) மிகவும் செழுமையாக இருந்தால்தான், (மாயையாக இல்லாமல்) யதார்த்தத்திற்கு இசைவானதாகவும் இருந்தால் மட்டும் தான் சரியான கருத்துக்களையும், தத்துவங்களையும் உருவாக்குவதற்கு அவைகள் அடிப்படையாக இருக்க முடியும்.

இங்கு இரண்டு முக்கியமான விஷயங்களை வலியுறுத்தியாக வேண்டும். முதலாவது, முன்பே குறிப்பிட்டதுதான்; இருந்தாலும் இங்கு திரும்பவும் குறிப்பிடப்பட வேண்டும், பகுத்தறிவு புலக்காட்சி அறிவைச் சார்ந்திருக்கிறது என்பதே அது; பகுத்தறிவை புலக்காட்சி அறிவிலிருந்து பெறத் தேவையில்லை என்று எவரேனும் நினைத்தால் அவர் ஒரு கருத்து முதல்வாதியாவார். சித்தாந்தத்தின் வரலாற்றில் ''பகுத்தறிவுவாதிகள்'' சிந்தனை முறை இருக்கிறது; அது யதார்த்தத்தை விவேகமான விளக்கமாக மட்டும்தான் ஒப்புக்

2



படிப்பகம்

www.padippakam.com

கொள்கிறதேயன்றி அனுபவமாக ஏற்றுக்கொள்வதில்லை, புத்தி பூர்வமானது மட்டுமே நம்பத்தக்கது; புலக்காட்சி அனுபவம் நம்பத்தக்கதல்ல என்று அது கருதுகிறது. இந்தச் சிந்தனை முறை விஷயங்களைத் தலைகீழாகப் புரட்டுவதன் மூலம் தவறிழைக்கிறது; புலக்காட்சி உணர்வைத் தனது ஊற்று மூலமாகக் கொண்டிருப்பதால்தான் பகுத்தறிவு நம்பத் தகுந்ததாக இருக்கிறது. இல்லாவிட்டால் அது ஊற்று மூலமில்லாத நீரோடையைப் போன்றதாக வேர்களில்லாத மரத்தைப் போன்றதாக இருக்கும். அகநிலைப்பட்டதாக, தான்தோன்றித்தனமானதாக, நம்பத்தகாததாக இருக்கும். அறிதலின் நிகழ்ச்சிப் போக்கை வரிசைப்படுத்தினால், புலக்காட்சி அனுபவம் முடிவில் வருகிறது. அறிதலின் நிகழ்ச்சி போக்கில் சமுதாய நடைமுறையின் முக்கியத்துவத்தை உண்மையிலேயே நாம் வலியுறுத்துகிறோம். ஏனென்றால், சமுதாய நடைமுறை ஒன்றுதான் மனித அறிவைத் தோன்றச் செய்கிறது என்பதோடு, புற உலகிலிருந்து புலக்காட்சி அனுபவத்தை மனிதன் பெறுவதைத் தொடங்கி வைப்பதற்கு சமுதாய நடைமுறை ஒன்றினால்தான் முடியும். தனது கண்களை மூடிக்கொண்டு காதுகளை அடைத்துக் கொண்டு, புற உலகிலிருந்து முற்றிலும் தன்னைத் துண்டித்துக் கொள்ளும் மனிதனுக்கு அறிவு என்று ஒன்று இருக்கமுடியாது. அறிவு அனுபவத்தில் தொடங்குகிறது. இதுதான் அறிவு பற்றிய தத்துவத்தின் பொருள்முதல்வாதமாகும்.

இரண்டாவது அம்சம் என்னவென்றால், இந்த அறிவு ஆழப்படுத்தப்படவேண்டியது அவசியம். அதாவது புலக்காட்சிக் கட்டத்தின் அறிவைப் பகுத்தறிவுக் கட்டத்திற்கு வளர்க்க வேண்டியது அவசியம். இதுதான் அறிவு பற்றிய தத்துவத்தின் இயங்கியல் ஆகும்.[8] அறிவு, புலக்காட்சி என்ற கீழ் நிலையிலேயே நிற்க முடியும் என்றும், புலக்காட்சி அறிவுதான் நம்பத்தக்கது என்றும் பகுத்தறிவு நம்பத்தக்கதல்ல என்றும் நினைப்பது ''அனுபவவாதம'' எனும் வரலாற்று ரீதியான தவறைத் திரும்பவும் செய்வதாகும். இந்தத் தத்துவம், எதைப் புரிந்து கொள்ளாதத் தவறைச் செய்கிற



தென்றால், புலக்காட்சி அறிவின் மூலம் அறியப்படும் விவரங்கள் புற உலகத்தின் யதார்த்தங்கள் சிலவற்றைப் பிரதிபலித்தபோதிலும் (அனுபவத்தை ஆத்ம சோதனை என்பதற்குள் குறுக்கிக் கொள்ளும் கருத்துமுதல்வாத அனுபவவாதத்தைப் பற்றி நான் இங்கு கூறவில்லை) அவை ஒருதலைபட்சமாகவும் மேலோட்டமாகவுமே இருக்கிறது ; அவை விஷயங்களை அரைகுறையாகத்தான் பிரதிபலிக்கிறது; அவற்றின் சாராம்சத்தைப் பிரதிபலிப்பதில்லை. ஒரு விஷயத்தை அதன் ஒட்டுமொத்தமான அம்சங்களையும் தழுவி முழுமையாகப் பிரதிபலிப்பதற்கு, அதன் சாராம்சத்தைப் பிரதிபலிப்பதற்கு, அதன் உள்ளார்ந்த விதிகளைப் பிரதிபலிப்பதற்கு, புலன் உணர்வினால் கிடைத்த எண்ணற்ற விவரங்களில் கொச்சையானவற்றைத் தள்ளிவிட்டு தேவையானதைத் தேர்ந்தெடுத்து, போலியானதை விலக்கிவிட்டு உண்மையானதைத் தக்கவைத்துக் கொண்டு, ஒரு அம்சத்திலிருந்து இன்னொரு அம்சத்திற்குத் தொடர்பு கொண்டு. புறப்பகுதியிலிருந்து உட்பகுதிக்குச் சென்று, கருத்துக்கள், தத்துவங்கள் ஆகியவற்றின் ஏற்பாடு ஒன்றின் உருவாக்க சிந்தனையைப் பயன்படுத்திப் புனரமைக்க வேண்டியது அவசியமாகும்—புலக்காட்சி அறிவிலிருந்து பகுத்தறிவுக்கு ஒரு துரிதப் பாய்ச்சலை நிகழ்த்துவது அவசியமாகும். இத்தகைய புனரமைக்கப் பட்ட அறிவு, வெற்றறிவோ நம்பத்தகாத அறிவோ அல்ல. அதற்கு மாறாக நடைமுறையின் அடிப்படையிலான, அறிதலின் நிகழ்ச்சிப்போக்கில், விஞ்ஞான ரீதியாக புனரமைக்கப் பட்டது என்னவாக இருந்தாலும் லெனின் கூறுவதைப் போல், அது புறநிலை யதார்த்தத்தை மேலும் ஆழமாக, மேலும் உண்மையாக, மேலும் முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. இதற்கெதிராக கொச்சையாக ''நடைமுறையாட்கள்'' அனுபவத்தை மதிக்கிறார்கள்; ஆனால் தத்துவத்தைச் சிறுமைப்படுத்துகிறார்கள்; எனவே அவர்களுக்கு முழுமையான புறநிலை நிகழ்ச்சிப்போக்கைப் பற்றி அனைத்தையும் தழுவிய கருத்தோட்டங்கள் இருக்காது; தெளிவான திசைவழி இருக்காது; நீண்டகால கண்ணோட்



படிப்பகம்

www.padippakam.com

டமும் இருக்காது; எப்பொழுதாவது ஏற்படுகின்ற வெற்றிகளையும் நொடிப் பொழுதே தெரியும் அரைகுறையான உண்மையையும் கொண்டு, அவர்கள் திருப்தியடைந்து விடுகிறார்கள். இத்தகைய நபர்கள் ஒரு புரட்சியை வழி நடத்தினால் அதை ஒரு முட்டுச் சந்தில் கொண்டுபோய் விட்டு விடுவார்கள்.

பகுத்தறிவு புலக்காட்சி அறிவைச் சார்ந்திருக்கிறது. புலக்காட்சி அறிவைப் பகுத்தறிவாக வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது—இதுதான் அறிவு பற்றி இயங்கியல் பொருள்முதல்வாதத் தத்துவம். சித்தாந்தத்தில் ''பகுத்தறிவுவாதமோ'', ''அனுபவவாதமோ'', அறிவின் வரலாற்று இயல்பை அல்லது இயங்கியல் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை. இந்தச் சிந்தனை முறைகள் ஒவ்வொன்றும் உண்மையின் ஒரு அம்சத்தை மட்டும் கொண்டிருந்த பொழுதிலும் (இங்கு நான் பொருள்முதல்வாதப் பகுத்தறிவுவாதத்தையும், பொருள்முதல்வாத அனுபவவாதத்தையுமே குறிப்பிடுகிறேன். கருத்துமுதல்வாத பகுத்தறிவுவாதத்தையும், கருத்துமுதல்வாத அனுபவவாதத்தையும் குறிப்பிடவில்லை). இவை இரண்டுமே அறிவு பற்றிய தத்துவத்தின் முழுமையைப் பொறுத்தமட்டில் தவறானவை புலக்காட்சி அறிவிலிருந்து பகுத்தறிவுவாதமாக வளரும் இயங்கியல் பொருள்முதல்வாத அறிவு இயக்கம் அறிதலின் சிறியதோர் நிகழ்ச்சிப் போக்கிற்கும் (உதாரணமாகத் தனியொரு விஷயத்தை அல்லது கடமையை அறிவது), அறிதலின் பெரியதோர் நிகழ்ச்சிப் போக்கிற்கும் (உதாரணமாக ஒரு முழுச் சமுதாயத்தை அல்லது ஒரு புரட்சியை அறிவது) உண்மையில் பொருந்தும்.

ஆனால் அறிவின் இயக்கம் இங்கே முடிவதில்லை, இயங்கியல் பொருள்முதல்வா[illegible] அறிவு இயக்கம் பகுத்தறிவோடு நின்றுவி[illegible] பிரச்சனையின் ஒரு பாதியைத்தான் தீர்க்கிறது. மார்க்சிய சித்தாந்தத்தைப் பொருத்தவரையில், குறைந்த முக்கியத்துவமுள்ள பகுதியே அது. புற நிலையான



உலகத்தின் விதிகளைப் புரிந்துகொண்டு அதை விளக்கும் ஆற்றல் பெற்றிருப்பது மிக முக்கியமான பிரச்சனையல்ல. ஆனால், இந்த விதிகளைப் பற்றிய அறிவைத் தீவிரமாக பயன்படுத்தி உலகத்தை மாற்றுவதுதான் மிக முக்கியமான பிரச்சனையாக மார்க்சிய சித்தாந்தம் கருதுகிறது.

மார்க்சியக் கருத்து நிலைப்படி, தத்துவம் முக்கியமானது, ''புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்க முடியாது''[9] என்ற லெனினுடைய வாசகத்தில் தத்துவத்தின் முக்கியத்துவத்தை முழுமையாகக் காணலாம். ஆனால் தத்துவம் செயலுக்கு வழிகாட்ட முடியும் என்ற ஒரே காரணத்தால்தான் மார்க்சியம் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. நாம் ஒரு சரியான தத்துவத்தைப் பெற்றிருந்தால், அதை நடைமுறையில் பயன்படுத்தாமல் அதைப்பற்றி வெறுமனே பிதற்றித் திரிந்தால், அல்லது பூட்டி வைத்திருந்தால் அந்த தத்துவம் எல்வளவு சிறந்ததானாலும் அதனால் ஒரு பயனும் இல்லை. அறிவு என்பது நடைமுறையிலிருந்து ஆரம்பமாகிறது. நடைமுறையின் மூலம் சேர்க்கப்பட்ட தத்துவ அறிவு திரும்பவும் நடைமுறைக்கேச் செல்கிறது அறிவின் சுறுசுறுப்பான பாத்திரம் புலக்காட்சி அறிவிலிருந்து பகுத்தறிவாக மாறும் துரிதப் பாய்ச்சலில் வெளிப்படுவது மட்டுமல்ல — மேலும் முக்கியமானது — பகுத்தறிவிலிருந்து புரட்சிகர நடைமுறைக்குச் செல்லும் துரித பாய்ச்சலிலும் வெளிப்பட வேண்டும், உலகத்தின் விதிகளை உட்கொள்ளுகின்ற அறிவை உலகத்தை மாற்றும் நடைமுறைக்குத் திருப்பி செலுத்த வேண்டும்; அதாவது பொருளுற்பத்தி நடைமுறையிலும், புரட்சிகர வர்க்கப் போராட்ட நடைமுறையிலும், புரட்சிகர தேசியப் போராட்டத்திலும், விஞ்ஞானப் பரிசோதனையிலும் திரும்பவும் பயன்படுத்தவேண்டும். இதுதான் தத்துவத்தைச் சோதித்து வளர்க்கும் நிகழ்ச்சிப் போக்கு. அறிதலின் முழு நிகழ்ச்சிப் போக்கின் தொடர்ச்சி. தத்துவம் புற நிலை யதார்த்தத்தோடு இசைவுடையதாக உள்ளதா என்ற பிரச்சனை மேலே குறிப்பிட்டுள்ள புலக்



படிப்பகம்

www.padippakam.com

காட்சியிலிருந்து பகுத்தறிவாக வளரும் அறிவின் இயக்கத்தில் முழுமையாக தீர்வுகாண்பதில்லை; தீர்வுகாணவும் முடியாது. இந்தப் பிரச்சனையை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்குரிய ஒரே வழி பகுத்தறிவு சமுதாய நடைமுறைக்குத் திரும்பச் செலுத்துவதுதான். தத்துவத்தை நடைமுறையில் பயன்படுத்தி ஒருவர் மனதில் எதிர்பார்க்கும் பலன்களை அடைய முடியுமா என்று பார்ப்பதாகும். இயற்கை விஞ்ஞானத்தின் பல தத்துவங்கள் உண்மையானவையாகக் கருதப்படுவதற்கு காரணம் இயற்கை விஞ்ஞானிகள் அவற்றைத் தோற்றுவித்த பொழுது அவ்வாறு கருதப்பட்டது என்பது மட்டுமல்ல. ஆனால் பின்னால் நடத்தப்பட்ட விஞ்ஞான நடைமுறையில் சரிபார்க்கப்பட்ட காரணத்தினாலும்தான் அவை உண்மையானவையாகக் கருதப்படுகின்றன. அதேபோல், மார்க்சிய—லெனினியத் தத்துவம் உண்மையானதாகக் கருதப்படுறதற்கு மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரால் விஞ்ஞான ரீதியில் உருவாக்கப்பட்டபொழுது அவ்வாறு கருதப்பட்டது என்பது மட்டுமல்ல, ஆனால் பின்னால் நடந்த புரட்சிகர வர்க்க போராட்ட நடைமுறையிலும் புரட்சிகர தேசிய போராட்ட நடைமுறையிலும் சரிபார்க்கப்பட்ட காரணத்தினாலும்தான் மார்க்சிய-லெனினிய தத்துவம் உண்மையானதாக கருதப்படுகின்றது. இயங்கியல் பொருள்முதல்வாதம், எல்லாக் காலத்திலும் அனைத்திற்கும் பொருந்தும் உண்மையாகும். ஏனெனில், எவரும் தனது நடைமுறையில் அதன் ஆளுகையிலிருந்து தப்ப முடியாது. பல தத்துவங்களின் உண்மையும் முழுமை பெறாததாக இருந்திருக்கிறது என்றும் முழுமை பெறா இந்தத் தன்மை நடைமுறையில் சோதிப்பதனூடே தான் சரி செய்யப்படுகிறது என்றும் மனித அறிவின் வரலாறு நமக்கு எடுத்துக் கூறுகிறது. பல தத்துவங்கள் தவறானவையாக இருக்கின்றன; நடைமுறையில் சோதிப்பதினூடேதான் அவற்றின் தவறுகள் சரி செய்யப்படுகின்றன. அதனால்தான் நடைமுறையே உண்மைக்கு உரைகல் என்று கூறப்படுகிறது. ''வாழ்வின் நிலைபாடு, நடைமுறையின் நிலைபாடு, அறிவு



பற்றிய தத்துவத்தின் அடிப்படையான, முதன்மையான நிலைபாடாக இருக்கவேண்டும்'' (லெனின்) [10] ''தத்துவம் புரட்சிகரமான நடைமுறையுடன் இணையாவிட்டால் அது இலக்கற்றதாகிவிடும். அதேபோல் நடைமுறையின் பாதையில் புரட்சிகர தத்துவம் ஒளி வீசாவிட்டால் நடைமுறை இருளில் தடுமாறும்'' என்று ஸ்டாலின் சிறப்பாகக் கூறினார். [11]

இந்த நிலையை அடைந்தவுடன், அறிவு வளர்ச்சியின் இயக்கம் முற்றுப்பெறுகிறதா? முற்றுப்பெறுகிறது. ஆனால் இன்னும் முற்றுப்பெறவில்லை என்பதே நமது பதில். ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக்கட்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட புறநிலை நிகழ்ச்சிப்போக்கை (இயற்கை நிகழ்ச்சிப்போக்கையோ அல்லது சமுதாய நிகழ்ச்சிப் போக்கையோ) மாற்றும் நடைமுறையில், சமுதாயத்திலுள்ள மனிதர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும்பொழுது, தங்கள் மூளையில் புறநிலை நிகழ்ச்சிப் போக்கைப் பிரதிபலித்து, தங்களுடைய உணர்வு பூர்வமான, துடிப்பான பாத்திரத்தைச் செயலாக்குவதன் விளைவாகத் தங்கள் அறிவைப் புலக்காட்சி அறிவிலிருந்து பகுத்தறிவிற்கு முன்னேற்றமடையச்செய்து, இந்தக் குறிப்பிட்ட புறநிலை நிகழ்ச்கிப்போக்கின் விதிகளுக்கு பொதுவாக இசைந்தவாறு கருத்துக்கள், தத்துவங்கள் அல்லது திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றை அவர்களால் உருவாக்க முடியும். இதன் பிறகு அவர்கள் இந்தக் கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல் முறைகள் ஆகியவற்றை இதே புறநிலை நிகழ்ச்சிப் போக்கின் நடைமுறையில் பயன்படுத்துகிறார்கள். இதே நடைமுறை நிகழ்ச்சிப் போக்கின் மூலம் அவர்கள் முன்பு வகுத்த தங்களுடைய கருத்துக்கள், தத்துவங்கள் திட்டங்கள் அல்லது செயல்முறைகள் ஆகியவற்றை யதார்த்த உண்மையாக மாற்ற முடியுமானால் அல்லது ஏறத்தாழ அவ்விதம் செய்ய முடியுமேயானால், அதாவது அவர்களுடைய மனதிலுள்ள குறிக்கோளை அவர்கள் அடைய முடியுமானால்,



படிப்பகம்

www.padippakam.com

இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சிப்போக்கைப் பொறுத்தவரை யில், அவர்களின் அறிவு வளரும் இயக்கம் பூர்த்தியாகிவிட்ட தெனக் கருதலாம். இயற்கையை மாற்றும் நிகழ்ச்சிப் போக்கில் ஒரு பொறியியல் திட்டத்தை பூர்த்தி செய்தல், ஒரு விஞ்ஞான ரிதியான கருதுகோளை சோதித்தல், ஒரு கருவியை படைத்தல், அல்லது விளைந்த தானியங்களை அறுவடை செய்தல் ஆகியவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்; அல்லது சமுதாயத்தை மாற்றும் நிகழ்ச்சிப்போக்கில் ஒரு வேலை நிறுத்தத்தின் வெற்றி, அல்லது ஒரு கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவது ஆகிய வற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவை அனைத்தும் ஒருவர் தனது மனதில் கொண்ட குறிக்கோளை அடைந்ததற்குரியவை என்று கருதலாம். ஆனால் பொது வாக கூறினால் இயற்கையை மாற்றும் நடைமுறையிலும்சரி, அல்லது சமுதாயத்தை மாற்றும் நடைமுறையிலும்சரி, மனிதர்கள் ஆரம்பத்தில் கொண்ட கருத்துக்கள், தத்து வங்கள், திட்டங்கள் அல்லது செயல்முறைகள் அப்படியே எவ்வித மாறுதலுமின்றி நிறைவேறுவதில்லை. இதற்குக் காரணம் யதார்த்தத்தை மாற்றுவதில் ஈடுபட்டிருப்போர் கள் வழக்கமாக, எண்ணற்ற வழிகளில் கட்டுப்படுத்தப் படுகிறார்கள்; நிலவிவரும் விஞ்ஞானத் தொழில்நுட்ப நிலைமைகளால் அவர்கள் கட்டுப்படுத்தப்படுவது மட்டு மின்றி, புறநிலை நிகழ்ச்சிப்போக்கின் வளர்ச்சியாலும், அந்த வளர்ச்சிப்போக்கு வெளிப்படும் அளவாலும் கூட (அதாவது புறநிலையான நிகழ்ச்சிப்போக்கின் அம்சங்களும், சாராம்ச மும் இன்னும் முழுமையாக வெளிப்படாதக் காரணத்தால்) அவர்கள் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். இத்தகைய நிலைமை யில், நடைமுறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் எதிர் பாராத சூழ்நில்லகளைக் கண்டறியும்பொழுது, கருத்துகள், தத்துவங்கள், திட்டங்கள், அல்லது செயல்முறைகள் ஆகிய வற்றில் வழக்கமாக ஒரு பகுதி மாற்றப்படுகின்றன அல்லது சில நேரங்களில் முழுமையாக மாற்றப்படுகின்றன; அதாவது ஆரம்பத்தில் உருவான கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்



கள் அல்லது செயல்முறைகள் ஒரு பகுதியோ அல்லது முழுமையாகவோ யதார்த்தத்துடன் இசைவாவதற்கு தவறி யதாலும், ஒரு பகுதியோ அல்லது முழுமையோ பிழை யானதாக இருப்பதாலும் இவ்வாறு நடைபெறுகின்றன. தவறான அறிவு சரி செய்யப்பட்டு, புறநிலை நிகழ்ச்சிப் போக்கின் விதிகளுக்கு இசைவானதாக்க முயலுவதற்கு முன்பும், இதன் விளைவாக, அகநிலைப் புறநிலையாக மாற்ற இயலுவதற்கு முன்பு, அல்லது வேறு விதமாகக் கூறினால், எதிர்பார்த்த பலனை நடைமுறையில் அடைய இயலுவதற்கு முன்பு, பல சந்தர்ப்பங்களில் தோல்விகள் பல முறை திரும்பத் திரும்ப நிகழவேண்டியிருக்கிறது. ஆயினும், இந்தக் கட்டத்தை அடைந்தவுடன் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச் சிப் போக்கில் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தினுடைய மனித அறிவின் இயக்கம் பூர்த்தியானதாகக் கருதப்படு கிறது.

எனினும் முன்னேற்றத்தின் நிகழ்ச்சிப் போக்கைப் பொறுத்தவரையில், மனித அறிவின் இயக்கம் பூர்த்தி யடையவில்லை. இயற்கை அரங்கிலும் சரி, சமுதாய அரங் கிலும் சரி ஒவ்வொரு நிகழ்ச்சிப்போக்கும் தன் உள் முரண் பாடுகள், போராட்டங்கள் ஆகியவற்றின் காரணமாக வளர்ச்சியும் முன்னேற்றம் அடைகின்றன; இதோடு சேர்ந்தே மனித அறிவின் இயக்கமும் வளர்ந்து முன்னேறுகின்றன. சமுதாய இயக்கத்தை பொறுத்தமட்டில் உண்மையான புரட்சித்தலைவர்கள் தமது கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல் முறைகள் தவறானவை என்று கண்டறியும் பொழுது மேலே குறிப்பிட்டாற் போல் அவற்றை சரிசெய்து கொள்வதில் சிறந்து விளங்க வேண்டு மென்பது மட்டுமல்ல; ஆனால் ஒரு குறிப்பிட்ட புறநிலை நிகழ்ச்சிப்போக்கு முன்னமேயே ஒரு வளர்ச்சிக் கட்டத்தி லிருந்து இன்னொரு வளர்ச்சிக் கட்டத்திற்கு முன்னேறி மாறுதல் அடைந்துவிட்ட பிறகு, அதற்கேற்றாற் போல் தாமும் தமது சகப்புரட்சியாளர்கள் அனைவரும் தங்க



படிப்பகம்

www.padippakam.com

ளுடைய அகநிலையான அறிவை வளர்த்து முன்னேற்றி மாற்றிக் கொள்வதிலும் அவர்கள் சிறந்து விளங்க வேண்டும். அதாவது, முன்வைக்கப்படும் புதிய புரட்சிகர கடமைகளும் புதிய செயல் முறைகளும் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றத்திற்கு இசைவுடையதாக இருக்கிறதா என்பதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு புரட்சிகரமான காலகட்டத்தில் நிலைமைகள் மிக வேகமாக மாறுகின்றன. மாறிய நிலைமைக்குத் தக்கபடி புரட்சிக்காரர்களின் அறிவும் வேகமாக மாறாவிட்டால் அவர்களால் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியாது.

எனினும் சிந்தனையானது யதார்த்தத்திலிருந்து பின் தங்கி சுணங்கி விடுவது அடிக்கடி நிகழ்கிறது; மனிதனுடைய அறிதலின் நிகழ்ச்சி சமுதாய நிலைமைகள் பலவற்றால் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். மாறிக் கொண்டிருக்கும் புறநிலைமைகளுடன் தங்களுடைய சிந்தனையையும் முன்னேற்றத் தவறி, வரலாற்று ரீதியாக வெளிப்பட்டுவரும் வலதுசாரி சந்தர்ப்பவாதத்தைக் கொண்டிருக்கும் புரட்சிகர அணிகளிலுள்ள மரமண்டையர்களை நாம் எதிர்க்கிறோம். எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டம் முன்னமேயே புறநிலையான நிகழ்ச்சி போக்கை முன்னோக்கித் தள்ளி விட்டிருக்கும் அதே நேரத்தில், தமது அறிவு பழைய கட்டத்திலேயே நின்று விட்டது என்பதை இவர்கள் காணத் தவறுகிறார்கள். எல்லா மரமண்டையர்களின் சிந்தனையின் தன்மையும் இதுதான். அவர்களுடைய சிந்தனை சமுதாய நடைமுறையிலிருந்து துண்டிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே சமுதாயத்தேரை முன்னோக்கிச் செலுத்துவதற்கு வழிகாட்டியாக இருக்க இவர்களால் முடியாது. இவர்கள் வெறுமனே அதற்குப் பின்னால் வால் பிடித்துச் செல்வார்கள்; அது மிக வேகமாகப் போகிறதென்று புலம்புவார்கள்; அந்தத்தேரைப் பின்னுக்கிழுக்கவும் எதிர்த்திசையில் திருப்பி விடவும் முயலுவார்கள்.



இடதுசாரி வாய்ச் சவடால் தனத்தையும் நாம் எதிர்க்கிறோம். ''இடதுசாரிகளின் சிந்தனை'' யானது, புறநிலையான நிகழ்ச்சிப் போக்கின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக்கட்டத்தைக் கடந்து செல்கிறது. அவர்களில் சிலர் தமது கற்பனையில் தோன்றிய புதுமைகளை உண்மையென்று கருதுகிறார்கள்; அதே நேரத்தில் மற்றவர்கள், எதிர்காலத்தில் மட்டுமே கைகூடக்கூடிய ஒரு இலட்சியத்தை நிகழ்காலத்திலேயே அடைந்து விடுவதற்காக கஷ்டப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பான்மை மக்கள் ஈடுபட்டுள்ள நடைமுறையிலிருந்தும் இன்றைய யதார்த்தத்திலிருந்தும் தங்களைத் துண்டித்துக் கொண்டு, தமது நடவடிக்கைகளில் அதி தீவிர அவசரவாதிகளாகக் காட்சியளிக்கிறார்கள். கருத்துமுதல்வாதமும் யாந்த்ரீகப் பொருள்முதல்வாதமும், சந்தர்ப்பவாதமும் அதிதீவிர அவசரவாதமும், இவை அனைத்தும் அகத்திற்கும் புறத்திற்கும் உடைவு ஏற்படுவது, அறிவு நடைமுறையில் இருந்து துண்டிக்கப்படுவது ஆகியவற்றின் இயல்பாகும். விஞ்ஞான பூர்வமான சமுதாய நடைமுறையின் இயல்பாக இருந்து வருகின்ற அறிவு பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவம் இத்தகைய தவறான தத்துவங்களை உறுதியாக எதிர்க்காமலிருக்க முடியாது. சுயமானதும் நிலையானதுமான பிரபஞ்ச வளர்ச்சியின் பொதுவான நிகழ்ச்சிப்போக்கில் ஒவ்வொரு குறிப்பான வளர்ச்சியின், நிகழ்ச்சிப் போக்கும் சார்புத்தன்மையுடையது; நிலையான பேருண்மையின் முடிவற்ற ஓட்டத்தில், ஒரு குறிப்பான நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சியில் எந்தவொரு குறிப்பிட்ட கட்டத்தைப் பற்றியும் மனிதன் பெறும் அறிவு, சார்புத் தன்மையுடைய உண்மையாகத்தான் இருக்கமுடியும் என்று மார்க்சியவாதிகள் அங்கீகரிக்கிறார்கள். எண்ணற்ற சார்புத் தன்மையான உண்மைகளை உள்ளடக்கிய ஒட்டு மொத்தமே முழுமையான பேருண்மையாகும்.[12]

புறநிலையான நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சி, முரண்பாடுகளும் போராட்டங்களும் நிறைந்தது. அதைப் போன்



படிப்பகம்

www.padippakam.com

றதே மனிதனின் அறிவு இயக்கமும். உலகின் இயங்கியல் இயக்கங்கள் அனைத்தும் விரைவிலோ, காலந்தாழ்ந்தோ மனித அறிவில் பிரதிபலிக்க முடியும். சமுதாய நடைமுறையில் தோற்றம், வளர்ச்சி, மறைவு ஆகிய நிகழ்ச்சிப்போக்கு முடிவற்றதாய் இருப்பதால், மனித அறிவிலும் தோற்றம், வளர்ச்சி, மறைவு ஆகிய நிகழ்ச்சிப் போக்கு முடிவற்றதாயிருக்கிறது. குறிப்பிட்ட கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல் முறைகள், புறநிலை யதார்த்தத்தை மாற்றும் மனிதனுடைய நடைமுறை மேலும் மேலும் முன்னேற முன்னேற, புறநிலை யதார்த்தத்தைப் பற்றிய மனிதனின் அறிவும் மேலும் மேலும் ஆழமாகிறது. புறநிலை உலகில் மாற்றத்தின் இயக்கங்கள் ஒருபொழுதும் முற்றுப்பெறாது. அதைப் போன்றதுதான், நடைமுறையின் மூலம் மனிதன் உண்மையை அறியும் நிகழ்ச்சிப்போக்கும். மார்க்சியம்-லெனினியம் எந்த வகையிலும் உண்மைபற்றிய முழு அறிவையும் அப்படியே திரட்டிக் கொடுத்து விடவில்லை. மாறாக, அது நடைமுறை வாயிலாக உண்மையை அறியும் வழியை இடைவிடாமல் திறந்து விடுகிறது. அகமும் புறமும், தத்துவமும் நடைமுறையும், அறிவதும் செய்வதும், ஸ்தூலமான வரலாற்றுரீதியான ஒற்றுமையில் இருக்கிறது என்பதே நமது முடிவு; ஸ்தூலமான வரலாற்றிலிருந்து பிரிந்து செல்லும் தவறான தத்துவங்கள் அனைத்தையும், அவை வலதாக இருந்தாலும்சரி, இடதாக இருந்தாலும்சரி, நாம் அவற்றை எதிர்க்கிறோம்,

சமுதாய வளர்ச்சியின் இன்றைய யுகத்தில், உலகத்தை சரியாகப் புரிந்துகொண்டு, மாற்றும் பொறுப்பை, வரலாறு பாட்டாளி வர்க்கத்தினதும், அதனுடைய கட்சியினதும் தோள்களின்மீது சுமத்தியிருக்கிறது. விஞ்ஞான பூர்வமான அறிவை ஆதாரமாகக்கொண்டு தீர்மானிக்கப்படுகின்ற, உலகத்தை மாற்றும் நடைமுறையினுடைய இந்த நிகழ்ச்சிப் போக்கு, உலகத்திலும் சீனத்திலும் ஒரு வரலாற்றுத் தருணத்தை ஏற்கனவே நெருங்கிவிட்டது. இந்த மகத்தான



தருணம் மனித வரலாறு காணாதது, அதாவது உலகத்திலிருந்தும் சீனத்திலிருந்தும் கரிய இருளை முற்றாக அகற்றிவிட்டு, உலகத்தை முன்பு எப்பொழுதும் இருந்திராததோர் ஒளிமயமான உலகமாக மாற்றும் தருணமே இது.

உலகத்தை மாற்றுவதற்காக பாட்டாளி வர்க்கத்தினதும் புரட்சிகர மக்களினதும் போராட்டம் கீழ்கண்ட கடமைகளை நிறைவேற்றுவதைத் தன்னகத்தே கொண்டுள்ளது; புற உலகத்தை மாற்றும் அதே நேரத்தில் தனது சொந்த அக உலகத்தையும் மாற்றுவது; அறிந்து கொள்ளும் திறனை மாற்றி, அக உலகத்திற்கும் புற உலகத்திற்கும் இடையிலான உறவை மாற்றுவது ஆகியனவாகும். உலகின் ஒரு பகுதியில், சோவியத் யூனியனில் இத்தகையதோர் மாற்றம் முன்னமேயே வந்து விட்டது. அங்குள்ள மக்கள் மாற்றத்தின் இந்த நிகழ்ச்சிப் போக்கை முன்னோக்கி தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். சீன மக்களும் உலகத்தின் இதர பகுதியில் வாழும் மக்களும் இத்தகைய நிகழ்ச்சிப் போக்கினூடே சென்றுகொண்டிருக்கிறார்கள் அல்லது செல்வார்கள். மாற்றப்படவேண்டிய புற உலகம் என்பதற்குள் இந்த மாற்றத்தின் விரோதிகளும் அடங்குவர். இவர்கள் சுயமாக உணர்வுபூர்வமாக மாறுவதற்கு முன்னால் நிர்பந்தமாக மாறும் ஒரு கட்டத்தைக் கடந்தாக வேண்டும். மனிதகுலம் முழுமையும் சுயமாகவும் உணர்வுபூர்வமாகவும் தங்களையும் உலகத்தையும் மாற்றும் பொழுதுதான் உலகக் கம்யூனிச யுகத்தை அடையமுடியும்.

நடைமுறையினூடே உண்மையைக் கண்டறிவது, மீண்டும் நடைமுறையினூடே உண்மைச் சோதித்து வளர்ப்பது; புலக்காட்சி அறிவிலிருந்து தொடங்கி, அதைத் தீவிரமாக வளர்த்து பகுத்தறிவாக்குவது, பகுத்தறிவிலிருந்து தொடங்கி புற உலகையும் மாற்றும் புரட்சிகர நடைமுறைக்குத் தீவிரமாக வழிக்காட்டுவது; நடைமுறை, அறிவு; மீண்டும் நடைமுறை, மீண்டும் அறிவு; இந்த வடிவம் முடிவற்று வளரும் வட்டமாக மீண்டும் மீண்டும் சுற்றி ஒவ்வொருச்



படிப்பகம்

www.padippakam.com

சுற்றிலும் நடைமுறை, அறிவு ஆகியவற்றின் உள்ளடக்கத்தை உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்துவது, இந்தகையது தான் இயங்கியல் பொருள் முதல்வாத அறிவுத்தத்துவத்தின் முழுமையாகும். இதுவே அறிவதற்கும் செய்வதற்கும் இடையேயுள்ள ஒற்றுமை பற்றிய இயங்கியல் பொருள்முதல்வாதத் தத்துவம்.

## குறிப்புகள்

1. ஹெகலின் ''தர்க்கவியலின் விஞ்ஞானம்'' என்ற நூலில் லெனின் ''கருத்து'' பற்றி எழுதிய குறிப்பு (1949), லெனின் கட்டுரைத் திரட்டு (1958) ரஷ்யப் பதிப்பு, 38ம் தொகுதி, பக்கம் 205.

2. காரல் மார்க்சின் ''பூயர்பாக் பற்றிய கருத்து'' (1845) என்ற கட்டுரை, மார்க்ஸ்-ஏங்கல்ஸ் தேர்ந்த கட்டுரைகள் (ஆங்கிலப் பதிப்பு மாஸ்கோ–1958) தொகுதி II, பக்கம் 403 மற்றும் லெனின் எழுதிய ''பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்'' (ஆங்கிலப் பதிப்பு மாஸ்கோ–1952) பக்கம் 136–142 ஆகியவற்றைப் பார்க்கவும்.

3. ''மூன்று சாம்ராஜ்ஜியங்களின் கதை'' என்பது 14ம் நூற்றாண்டு இறுதியிலும் 15ம் நூற்றாண்டு துவக்கத்திலும் எழுதப்பட்ட புகழ்மிக்க சீன நாவல்.

4. ஹெகலின் ''தர்க்கவியலின் விஞ்ஞானம்'' என்ற நூலில் ''மானசீகத் தர்க்கவியல் அல்லது கற்பனையின் தத்துவம்'' என்பது பற்றி லெனின் குறிப்புகள், லெனின் கட்டுரைத் திரட்டு (ரஷ்யப் பதிப்பு 1958) தொகுதி 38 பக்கம் 161.



5. தய்ப்பிங் சொர்க்க சாம்ராஜ்ஜிய இயக்கம் என்பது 19-ம் நூற்றாண்டு மத்தியில், சிங் ராஜவம்சத்தின் தேசிய ஒடுக்கு முறையையும் நிலப்பிரபுத்துவ ஆட்சியையும் எதிர்த்து நடைபெற்ற புரட்சிகர உழவர்களின் யுத்தம். 1851-ல் உழவர்களின் தலைவர்கள், குவாங்சி மாநிலத்தில் கைப்பிங் மாவட்டத்திலுள்ள சின்டியன் கிராமத்தில் ஒரு பேரெழுச்சியைத் தொடுத்து, தய்ப்பிங் சொர்க்க சாம்ராஜ்ஜியத்தைப் பிரகடனம் செய்தார்கள். குவாங்சியில் இருந்து வடதிசை நோக்கி விரைந்த அந்த உழவர்களின் ஆயுதப் படை, ஹூனான், ஹூப்பே ஆகிய இடங்களை 1852ல் கைப்பற்றியது. 1853ல் அது கியாங்சி, அன்வெய் ஆகிய இடங்கள் வழியாக முன்னேறி நான்கிங்கைக் கைப்பற்றியது. பிறகு படையின் ஒரு பகுதி வடக்கு நோக்கி மேலும் சென்று டியான்சினின் எல்லையை அடைந்தது. இருப்பின் தய்ப்பிங் உழவர்களின் ஆயுதப்படை, தான் கைப்பற்றிய பகுதிகளில் உறுதிவாய்ந்த தளப்பகுதிகளை அமைக்கத் தவறியது; மேலும் நான்கிங்கை தலைநகராக்கியதற்குப் பின், அதன் தலைமைக் குழு பல அரசியல், இராணுவத் தவறுகளை இழைத்தது. இதனால் சியாங் அரசும் பிரிட்டன், அமெரிக்கா, பிரஞ்சு ஆக்கிரமிப்பாளர்களும் கூட்டாகச் சேர்ந்து நடத்திய எதிர்ப்புரட்சித் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் போய் 1864ல், இறுதியாக அது தோற்கடிக்கப் பட்டது.

6. யீ ஹோ டுவான் இயக்கம் என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆயுதப் போராட்டம். அது 1900-ம் ஆண்டில் வட சீனத்தில் நடந்தது. பரந்துபட்ட உழவர்களும், கைத்தொழில் தொழிலாளர்களும் பிற பிரிவு மக்களும் அதில் பங்கு கொண்டனர். மதம், மற்ற துறைகள் ஆகியவற்றின் ஊடே, ஒருவரை மற்றவர் தொடர்பு கொண்டு, இரகசிய சங்கங்களை உருவாக்கி, அதனடிப்படையில் ஆயுதமேந்தி, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஜெர்மனி, ருஷ்யா, பிரஞ்சு, இத்தாலி, ஆஸ்திரேலியா – ஆகிய எட்டு



படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்து வீர சாகசம் மிக்க
யுத்தத்தை நடத்தினார்கள். விரோதிகள் பீக்கிங்கையும்,
டேயென்சின்னையும் கைப்பற்றிய பின்பு, வருணிக்க முடியாத
கொடூர முறைகளால் இந்த இயக்கத்தை ஒடுக்கினர்.

7. மே-4ம் நாள் இயக்கம் என்பது ஏகாதிபத்திய
எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சிகர இயக்கம்.
இது 4-5-1919ல் துவங்கியது. முதலாம் உலக யுத்தத்தில்
வெற்றிபெற்ற பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ஜப்பான்,
இத்தாலி மற்றும் பிற ஏகாதிபத்திய நாடுகள் யுத்தத்தில்
கபளீகரம் செய்ததை பங்கு போட்டுக் கொள்வதற்காக,
அந்த ஆண்டின் முற்பகுதியில், பாரிசில் கூடினார்கள்.
சீனத்திற்குச் சொந்தமான ஷாண்டுங் மாநிலத்தில், முன்பு
ஜெர்மன் அனுபவித்து வந்த எல்லா உரிமைகளையும்
ஜப்பான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு
செய்தார்கள். இந்தத் திட்டத்தை வைராக்கியத்தோடு
எதிர்த்து முதன் முதலில் ஊர்வலம் ஆர்ப்பாட்டம் நடத்திய
வர்கள் பீக்கிங்கிலிருந்த மாணவர்கள்தான். இந்த எதிர்ப்பை
ஒடுக்குவதற்காக, வடபுறத்து யுத்தபிரபுக்களின் அரசாங்கம்
முப்பது மாணவர்களைக் கைது செய்தது. இதை எதிர்த்து
பீக்கிங் மாணவர்கள் படிப்பை நிறுத்தி விட்டார்கள்.
இதற்கு ஆதரவாக நாட்டின் பிற பகுதி மாணவர்களும்
திரண்டனர். ஜூன் 3ம் நாள் வடபுறத்து யுத்தப் பிரபுக்
களின் அரசாங்கம், பீக்கிங் மாணவர்களைக் கூட்டாகக்
கைது செய்யத் தொடங்கியது. இரண்டு நாட்களுக்குள்
ஆயிரம் பேர்களுக்குமேல் காவலில் வைக்கப்பட்டனர். இது
மேலும் சினத்தை மூட்டி நாடு முழுவதையும் கொதித்தெழச்
செய்தது. ஜூன் 3 முதல் ஷாங்காய் நகரத்திலும் மற்றும்
பல நகரங்களிலுமுள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்
தத்தில் இறங்கினார்கள். இந்த இடங்களிலுள்ள வியாபாரி
கள் கடையடைப்புச் செய்துவிட்டனர். இவ்வாறாக, ஆரம்
பத்தில் படிப்பாளிகளை மட்டும் கொண்டு ஆரம்பித்த
தேசபக்த இயக்கமானது, துரிதமாக வளர்ந்து பாட்டாளி



வர்க்கம், நகர்ப்புற சிறு உடமை வர்க்கம், முதலாளி வர்க்கம்
ஆகியோரைக் கொண்ட நாடு தழுவிய இயக்கமாக மாறியது.
இந்த தேசபக்த இயக்கத்தின் வளர்ச்சியின் கூடவே,
மே-4க்கு முன்பே நிலப்பிரபுத்துவத்திற்கெதிராக விஞ்ஞா
னத்தையும், ஜனநாயகத்தையும் உயர்த்துவதற்காக ஆரம்
பிக்கப்பட்ட புதிய கலாச்சார இயக்கமும், வலிமைமிக்க
தொரு புரட்சிகரக் கலாச்சார இயக்கமாக மிகத் தீவிரமாக
வளர்ச்சியடைந்தது. அந்த புரட்சிகர கலாச்சார இயக்கத்
தின் மையமான நீரோட்டம் மார்க்சிய-லெனினியத்தைப்
பரப்புவதாக இருந்தது.

8. ஹெகலின் ''தர்க்கவியலின் விஞ்ஞானம்'' புத்த
கம் III, பகுதி 3ல் லெனின் எழுதிய ''கருத்து'' பற்றிய குறிப்
பைப் பார்க்கவும். அதில் அவர் கூறுகிறார்: ''அறிந்து
கொள்வதற்காக, அனுபவித்து அறிந்துகொள்ள தொடங்கி
கற்று, அனுபவத்திலிருந்து சர்வ வியாபகத்திற்கு (அனைத்தும்
தழுவியதற்கு) உயர்ந்து செல்வது அவசியம்'' (லெனின்
கட்டுரைத் தொகுப்பு) (ருஷ்யப் பதிப்பு 1958) தொகுதி
38. பக். 197.

9. லெனின், ''என்ன செய்ய வேண்டும்?'' கட்டுரைத்
திரட்டு, (ஆங்கிலப் பதிப்பு) (மாஸ்கோ அயல் மொழிப்பதிப்
பகம், 1961) தொகுதி - 5, ப. 369.

10. லெனின், ''பொருள்முதல்வாதமும் அனுபவவாத
விமர்சனமும்'' (ஆங்கிலப்பதிப்பு மாஸ்கோ அயல்மொழிப்
பதிப்பகம் 1952) ப. 141.

11. ஜே. வி. ஸ்டாலின், ''லெனினியத்தின் அடிப்படை
கள்'' (1924), லெனினியத்தின் பிரச்சனைகள், (ஆங்கிலப்
பதிப்பு, மாஸ்கோ அயல்மொழிப் பதிப்பகம், 1954) பக்கம் 31.

12. லெனின் எழுதிய ''பொருள்முதல்வாதமும் அனு
பவவாத விமர்சனமும்'' (ஆங்கிலப் பதிப்பு, மாஸ்கோ அயல்
மொழிப் பதிப்பகம் 1952) பக்கம் 129-36யை பார்க்கவும்.

3



படிப்பகம்

www.padippakam.com

# நடைமுறை பற்றி

நமது கட்சியில் பல தோழர்கள் வறட்டுத் தத்துவவாதிகளாகவும் நீண்டகாலமாகச் சீனப் புரட்சி அனுபவத்தை நிராகரித்து, ''மார்க்சியம் ஒரு வறட்டுத் தத்துவமல்ல; செயலுக்கு வழி காட்டி'' என்ற உண்மையை மறுத்து, இடத்திற்கு பொருந்தாத வகையில் மார்க்சிய படைப்புகளி லிருந்து எடுக்கப்பட்ட வார்த்தைகளையும் சொற் றொடர்களையும் கொண்டு மக்களை அச்சுறுத்து பவராயும் இருந்து வந்தது வழக்கம். அத்துடன் இன்னும் பல தோழர்கள் அனுபவவாதிகளாகவும் நீண்டகாலம் தம் பூர்த்தியாய் இல்லாத அனுபவத் தோடேயே நின்று, புரட்சிகர நடைமுறைக்குத் தத்துவம் முக்கியமானது என்பதைப் புரிந்து கொள்ளாமலும் புரட்சியை முழுமையாகப் பார்க் காமலும் இருந்தனர்; அவர்கள் பெருமுயற்சியுடன் வேலை செய்தனர். ஆனால் கண்மூடித்தனமாய் வேலை செய்தனர்; இவ்விரு வகைத் தோழர் களதும் தவறான கருத்துக்கள் குறிப்பாக வறட்டுத் தத்துவவாதிகளின் கருத்துக்கள் சீனப் புரட்சிக்கு 1931—34 வரை பெரும் சேதம் விளைவித்தன. இன்னும் இந்த வறட்டுத் தத்துவவாதிகள் மார்க்



சியவாதிகளாக வேடம் பூண்டுகொண்டு பல தோழர்களைக் குழப்பியடித்தனர். ''நடைமுறை பற்றி'' என்பது கட்சியிலிருந்த வறட்டுத் தத்துவ வாதம், அனுபவவாதம் ஆகிய இந்த அகநிலைத் தவறுகளை, குறிப்பாக வறட்டுத் தத்துவ வாதத் தவறை மார்க்சிய அறிவுத் தத்துவ நிலைப் பாட்டில் நின்று அம்பலப்படுத்தும் பொருட்டு எழுதப்பட்டது. இது நடைமுறையைக் குறைத்து மதிப்பிட்ட வறட்டுத் தத்துவவாத வகை அகநிலை வாதத்தை அம்பலப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்ததால், இது ''நடைமுறை பற்றி'' என்ற தலைப்பைப் பெற்றது. இக் கட்டுரையில் அடங்கி யுள்ள கருத்துக்கள் யேனானிலிருந்த ஜப்பானிய எதிர்ப்பு ராணுவ அரசியற் கல்லூரியில் ஆற்றிய விரிவுரையொன்றில் தோழர் மாசேதுங் அவர் களால் எடுத்துரைக்கப்பட்டன.

—சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி யின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாசேதுங் படைப்புகளைப் பிரசுரிப்பதற்கான கமிட்டி.



படிப்பகம்